<u>**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**</u>

<u>**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**</u>

<u>**MCOP .No. 21/2024**</u>

<u>**நாள் : 16.09.2025**</u>

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. நாகம்மாள் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை பெயர் | : | திரு. செல்வம் | வயது | : | 56 |
| ஊர் | : | பாச்சல் | தொழில் | : | பழம் வியாபாரி |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் வழக்கின் மனுதாரரும் விபத்தில் காயம்பட்டவரும் ஆவேன். இந்த வழக்கிற்கான கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் Discharge Summary **– ம.த.சா.ஆ.24**

2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் O.P.D. Summary **– ம.த.சா.ஆ.25**

3. MIOT மருத்துவமனை மருத்துவ பில்கள் **– ம.த.சா.ஆ.26**

**குறுக்கு விசாரணை**

1. ம.த.சா.ஆ.24 முதல் 26 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்யும் வகையில் நான் மீண்டும் அழைக்கப்பட்டேன் என்றால் சரிதான். ம.த.சா.ஆ.26 பில்களில் 03.05.2025 தேதியில் ரூ.2,227/– மருத்துவ செலவினமாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 09.05.2025 தேதியில் ரூ.336/– மருத்துவ செலவினமாக செல்வம் என்ற பெயரில் செலுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செல்வம் எனது கணவர் ஆவார். அதேபோல் 12.05.2025 தேதியில் ரூ.2,818/– மருத்துவ செலவினமாக செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் 30.04.2025 ஆம் தேதியில் சேர்க்கபட்டு 12.05.2025 ஆம் தேதி விடுவிப்பு பெற்றதாக கண்டுள்ளது என்றால் சரிதான். இதற்கு இடைப்பட்ட காலத்தில் ரூ.1,97,971/–

செலவானதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு 19.05.2025 ஆம் தேதியில் ரூ.850/– ஆனது தொகை செலுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே தேதியில் ரூ.250/– தொகை consultation charge ஆக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் சொல்லப்பட்டவை உண்மையானவை என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததற்கு எதிராக மாற்று கருத்து இல்லை என்றால் சரிதான். நான் வெள்ளை கோடு போடப்பட்டு இருந்து இடத்தில் சாலையை கடந்து இருந்தால் விபத்து ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் வெள்ளை கோடே போடவில்லை என்று சாட்சி கூறுகிறார்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.